demo full chap

மாதிரி வினாத்தாள் 2 T3

6th Standard

**அறிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்

Time : 01:30:00 Hrs | Total Marks : 55

பகுதி-அ | 10 x 1 = 10

1) குப்பைகளை மண்ணில் மக்கச் செய்பவை --------

(a) நுண்ணுயிரிகள் (b) மண்புழுக்கள் (c) பறவைகள் (d) அ மற்றும் ஆ

2) மக்காத கழிவுக்கு எடுத்துக்காட்டு--------

(a) காகிதம் (b) துணி (c) பாலிதீன் பை (d) தழைகள்

3) உரமாக மாறக் கூடிய கழிவு ----------

(a) கண்ணாடி (b) நெகிழி (c) உலோகங்கள் (d) வீட்டுக்கழிவுகள்

4) மருத்துவக் கழிவுகளை அகற்றும் முறை -----------

(a) நிலத்தில் நிரப்புதல் (b) உரமாக்குதல் (c) எரித்துச் சாம்பலாக்குதல் (d) மறுசுழற்சி செய்தல்

5) உரம் தயாரிப்பில் பயன்படும் உயிரி--------

(a) அட்டை (b) உருளைப்புழு (c) மண்புழு (d) தட்டைப்புழு

6) கீழ்க்காண்பவற்றில் எது இயற்கை இழை அன்று?

(a) பட்டு (b) கம்பளி (c) பாலியெஸ்டர் (d) சணல்

7) கோடை காலங்களில் எந்த ஆடையைத் தேர்ந்தெடுப்பாய்?

(a) நைலான் (b) கம்பளி (c) பட்டு (d) பருத்தி

8) விலங்குகளின் உரோமங்களில் இருந்து தயாரிக்கப்படும் ஆடை

(a) கம்பளி (b) பருத்தி (c) பட்டு (d) நைலான்

9) மருத்துவத் துறைக்கான பல சாதனங்கள் செய்ய அதிகம் பயன்படுவது

(a) பாலியெஸ்டர் (b) நெகிழி (c) கண்ணாடி (d) பருத்தி

10) சோப்பு தயாரிக்கப் பயன்படும் முக்கிய வேதிப் பொருள்

(a) சோடியம் ஹைட்ராக்சைடு (b) சோடிய சக்கலவை (c) சோடியம் சிலிகேட் (d) சோடியம் பைகார்பனேட்


பகுதி-ஆ | 8 x 1 = 8

11) கண்ணாடியை ஒரே சீராகவும் மெதுவாகவும் குளிரவைக்கும் முறைக்கு_____ என்று பெயர்


12) தாவரத்தின் தண்டுப் பகுதியிலிருந்து பெறப்படும் இழை______

13) பருத்தியில்_______ என்ற வேதிப் பொருள் உள்ளது

14) படத்தை உற்றுநோக்கி, கொடுக்கப்பட்ட பொருள்கள் எத்தகைய தன்மைபெற்றவை என்பதை எழுதுங்கள்




15) இப்படம் ஒளியின் எப்பண்பைக் காட்டுகிறது ?




______

GB 365 QUESTION BANK 365 https://www.gb365.in

16) படத்தில் குறிக்கப்பட்டுள்ள A,B,Cஎத்தகைய தன்மையுடைய பொருள்கள்?




17) வெளிப்புறத்திலிருந்து பார்க்கும் பொழுது கண்ணாடிக் குவளைக்குள் தெளிவாகத் தெரியும் பொருள்கள்____,_______




படத்திலுள்ள பொருள்களின் தன்மை


| வ.எண் | பொருள் | தன்மை |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

18) படத்தை உற்றுநோக்கவும். இதிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள் என்பதை எழுதவும்.

படம் 1:



படம் 2:




பகுதி-இ 37 x 1 = 37

19) அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை நாளில் காலை முதல் இரவு வரை உங்கள் கண்ணில்படக்கூடிய தாவரங்கள், விலங்குகள் பெயர்களைப் பட்டியலிடுக

20) உங்களுக்குப் பிடித்த செல்லப் பிராணி (Pet animal) பற்றி ஐந்து வரிகளில் எழுதுக

21) தேனீ வளர்த்தல் / பட்டுப்பூச்சி வளர்த்தல் பற்றிய செய்திகளைச் சேகரித்து எழுதுக. (நேரில் பார்வையிட்டு/செய்தித்தாள் செய்திகள்/ புத்தகங்கள் / நூலகத்தின் வாயிலாக)

22) உங்களுக்குக் கிடைக்கும் பல்வேறு விதைகளைச் சேகரித்திடுக; பெயர்களை எழுதிடுக. அவற்றை ஒரு சிறுகலத்தில் மண் நிரப்பி, விதைத்து, நீர் ஊற்றுக. அவற்றுள் எத்தனை விதைகள் ஒரு வாரத்தில் முளைத்தன என்பதைக் கண்டறிக

23) உங்களுக்குப் பிடித்தமான ஏதாவது ஒரு பறவையின் படம் வரைந்து வண்ணமிட்டு அதற்கேற்றாற் போல் சிறிய கவிதை ஒன்றினை எழுதுக

24) பறவைகளின் சிறகுகளைக் கொண்டு அலங்காரப் பொருள் ஒன்று தயாரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக

25) சில ஆண்டுகளுக்கு முன் அதிக எண்ணிக்கையில் காணப்பட்ட சிட்டுக்குருவி, கழுகு, வண்ணத்துப்பூச்சி போன்ற உயிரினங்கள் தற்போது எண்ணிக்கையில் குறைந்து அவை அருகிவரும் நிலையில் உள்ளன எனப் பத்திரிக்கை செய்திகள் கூறுகின்றன. இக்கூற்று உண்மையா? அப்படியெனில் அதற்கான காரணங்கள் என்னவாக இருக்கும்? இவ்வுயிரினங்களை அழிவிலிருந்து காப்பாற்ற நம்மால் முடியுமா? முடியும் என்றால், எப்படிக் காப்பாற்றலாம் என்பது பற்றிய உங்கள் கருத்துக்களைத் தொகுக்கவும்.

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in

26) பூச்சியினத்தில் நோய் பரப்பும் முக்கியக் காரணியாகத் திகழ்வது கொசு.
அ. கொசுக்கடியினால் ஏற்படும் நோய்கள் என்னென்ன?
ஆ. கொசுக்களை ஒழிக்க நாம் என்ன வழிமுறைகளைக் கையாளலாம்?

27) தாவரங்களில் ஆணிவேர்த் தொகுப்பு, சல்லிவேர்த் தொகுப்பு காணப்படுகிறது. பெரிய மரங்களில் எவ்வகையான வேர்த்தொகுப்புகள் காணப்படும்? அதற்கான காரணங்களை எழுதுக.

28) அறிவியல் வளர்ச்சியின் விளைவாக மனிதன் புதிய புதிய கண்டுபிடிப்புகளை நாள்தோறும் நிகழ்த்தி வந்தாலும், மிக நுண்ணிய அளவுள்ள நுண்ணுயிரிகளால் மனிதன் நோய்வாய்ப்படுகிறான். இதற்கான காரணங்களையும் தடுப்பு முறைகளையும் விவாதிக்க.



ஒட்டகம்



துருவக்கரடி

29) பழத்தோல், நெகிழி, இலைகள், காய்கறிகள்.

30) கண்ணாடி, விலங்குக் கழிவு , உலோகம், நெகிழி.

31) எரித்துச் சாம்பலாக்குதல், உரமாக்குதல், நிலத்தில் நிரப்புதல், ஆவியாக்குதல்.

32) புதிதாகக் கட்டப்படும் கட்டடத்திற்கு அடிக்கடி நீர் ஊற்றுவதேன்?அப்படி நீரை ஊற்றவில்லை என்றால் என்னவாகும்?

33) சுவர், தரை பூசுவதற்குக் காரை பயன்படுகிறது. அணைக்கட்டுகள், பாலங்கள் கட்ட____ பயன்படுகிறது. இவை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

34)



படத்திலுள்ள சமையற்கலன்களில் 'ஒ' குறியிடப்பட்ட பகுதி_____ அந்தப் பகுதி எதனால் செய்யப்பட்டது ? ஏன்? அது எவ்வகையைச் சார்ந்தது

35) மின்பொத்தான், தண்ணீர்ப் புட்டி இரண்டுமே நெகிழியால் ஆனவை என்று உங்களுக்குத் தெரியும். நெகிழி வகைகளின் அடிப்படையில் இவற்றை எவ்வாறு வேறுபடுத்துவீர்கள்?

36) குளிர்காலங்களில் ஒரு ஸ்வெட்டரை அணிவதற்குப் பதிலாக ஒன்றன்மீது ஒன்றாக இரண்டு (அ) மூன்று ஆடைகளை அதிஜிம் போது எப்படி உணர்னிர்கள்? ஏன்?

37) அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் வேதிப்பொருள்கள் அனைத்தும் பயனுள்ளதாகவும் சுற்றுச்சூழலை மாசுப்படுத்தாமலும் இருக்கின்றனவா? என்பதை சொந்தநடையில் எழுதுக

38) 'நெகிழி நமது பூமியின் ஆயுளுக்கே மிகப் பெரிய கேடாக அமைகிறது" எவ்வகையில்

39) சணல், ரேயான், நைலான், பட்டு, பருத்தி, பாலியெஸ்டர், கம்பளி இவற்றை வகைப்படுத்துக. உங்கள் வகைப்பாட்டிற்கான காரணத்தைக் கூறுக

40) உருக்கிய கண்ணாடியை cldoahfnth மிக மெதுவாகவோ குளிர வைக்கக் கூடாது. ஏன்?அதற்கு மாறாக என்ன செய்ய வேண்டும்

41) பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுத்து வட்டமிடுக. உங்கள் விடைக்கான காரணம் கூறுக
1. அகல் விளக்கு, கரும்பலகை, மின்விளக்கு.
2. எண்ணெய் தடவிய தாள், சொரசொரப்பாக உள்ள சன்னல் கண்ணாடி, மரக்கதவு.
3. நிழல் உருவாதல், கிரகணம் உருவாதல், கண்ணாடியில் முகம் தெரிதல்.

42) தாமாக ஒளியைத் தரும் பொருள்கள்

43) தாமாக ஒளியைத் தராத பொருள்கள்

44) தம்வழியே ஒளியை உட்புக அனுமதிக்கும் பொருள்கள்

45) தம்வழியே ஒளியைப் பகுதியாக உட்புக அனுமதிக்கும் பொருள்கள்

46) தம் வழியே ஒளியை உட்புக அனுமதிக்காத பொருள்கள்

47) நிழல்களை உருவாக்குபவை

48) பொருள்களைப் பார்க்கத் தேவையானவை

49) வேறுபடுத்தி அறிக
நிழல்,பிம்பம்

50) வேறுபடுத்தி அறிக
இயற்கை ஒளிமூலம், செயற்கை ஒளிமூலம்

51) வேறுபடுத்தி அறிக
ஒளிபுகும் பொருள், ஒளிபுகாப் பொருள்.


52) வேறுபடுத்தி அறிக
ஒளிரும் பொருள், ஒளிராப் பொருள்

53) வெவ்வேறு வண்ணங்களுடைய பந்துகள், மலர்கள், கனசதுரக் கட்டை, சதுரக் கட்டை மற்றும் நாணயம் போன்றவற்றை ஒளிமூலத்தின் முன் உயர்த்திப் பிடித்து தரையில் விழும் நிழலை உற்று நோக்கும் பொழுது

i) நிழலின் நிறம், வடிவம் பொருளைப் போன்றே இருக்குமா அல்லது ஏதேனும் மாற்றம் இருக்குமா ?

ii)எந்தெந்தப் பொருள்களின் நிழல் ஒரே மாதிரி இருக்கும் ?

54) படத்தில் பிரகாசமான ஒளிமூலத்தின் கீழேயுள்ள ஊசித்துளைக் காமிராவின் துளைக்கு முன்னால், சிறுவன் நின்று கொண்டிருக்கிறான். இப்படத்தை உற்றுநோக்கி கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்




i)சிறுவனின் தலைப் பகுதியிலிருந்து வரும் ஒளிக்கதிர் ஊசித்துளைக் காமிராவின் திரையில் எந்தப் புள்ளியில் விழுகிறது

ii)சிறுவனின் உடலின் மையப்பகுதியிலிருந்து வரும் ஒளிக்கதிர் ஊசித்துளைக் காமிராவின் திரையில் எந்தப் புள்ளியில் விழுகிறது?

iii)சிறுவனின் பாதத்திலிருந்து வரும் ஒளிக்கதிர் ஊசித்துளைக் காமிராவின் திரையில் எந்தப் புள்ளியில் விழுகிறது

iv)திரையில் கிடைக்கும் பிம்பம் சிறுவனைப் போன்றே நேராகத் தெரியுமா?அல்லது தலைகீழாகத் தெரியுமா

55) பின்வரும் படத்தை உற்றுநோக்கி அதிலுள்ள பிழைகளைக் கண்டுபிடித்து எழுதவும்



*****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in